2010 ஏப்ரல் 19]

கோயிலாகக் கருதப்படுகின்ற மாரியம்மன் திருக்கோயில் பற்றி தொடர்ந்து நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன் அவர்கள்கூட வலியுறுத்தி வந்தார்கள். அவர்களுடைய வலியுறுத்தலை நிறைவேற்றுகின்ற வகையிலே மாநகராட்சியோடு தொடர்பு கொண்டு, விவரங்களைச் சேகரித்த நேரத்தில், தண்ணீர் வற்றாமல் இருக்க வேண்டுமானால் அதற்காக ஆண்டு ஒன்றுக்கு 36 இலட்சம் ரூபாய் மின் கட்டணத்திற்காகச் செலுத்த வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதற்கும் நாம் தயாராக இருந்தாலுங்கூட, வைகை ஆற்றில் நிரந்தரமாகத் தண்ணீர் வருவதில்லை என்றும், அங்கும் நிலத்தடி நீர் குறைந்து கொண்டே வருகின்ற காரணத்தால், மணலூர் போன்ற பகுதிகளில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, குளத்தை மாநகராட்சியிடம்கூட தருவதற்குத் தயாராக இருக்கிறோம். தண்ணீர் நிரப்புகின்ற பணியை மாநகராட்சியோ, அரசின் பிற துறைகளோ ஏற்றுக்கொண்டால் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 58, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**58—**

**நடுநிலைப் பள்ளி**

***83334—திரு. மு.க. பெரியசாமி:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரத்தில் நடுநிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகார் தொகுதி, காளகஸ்திநாதபுரத்தில் நடுநிலைப் பள்ளி துவக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[2010 ஏப்ரல் 19

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூம்புகார் தொகுதி, செம்பனார்கோவில் ஒன்றியம், காளகஸ்திநாதபுரத்தில் அரசினர் உதவிபெறும் தொடக்கப் பள்ளி நடைபெறுகிறது. இந்தப் பள்ளியில் 280 மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். உமையாள்புரம், அபிஷேகக்கட்டளை, நாச்சிக்கட்டளை போன்ற கிராமங்களில் படிக்கின்ற மாணவர்கள் நடுநிலைப் பள்ளியில் பயிலுவதற்காக, நான்கு கிலோ மீட்டர் தூரமுள்ள செம்பனார்கோவிலுக்கோ அல்லது ஆக்கூருக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இவர்கள் தொடக்கக் கல்வியை முடித்துவிட்டு, நடுநிலைப் பள்ளிக் கல்வியைத் தொடர முடியாமல் இடைநிறுத்தம் செய்து விடுகிறார்கள். ஆகவே இதைப் பரிசீலனை செய்து, அரசு நடுநிலைப் பள்ளியைத் துவக்க முன்வருமா எனத் தங்கள்வாயிலாக அமைச்சரைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக அரசினுடைய கொள்கைப்படி, ஏற்கெனவே அங்கே ஒரு அரசு நிதியுதவி பெறக்கூடிய தொடக்கப் பள்ளி இருந்தால், தனியாக ஒரு நடுநிலைப் பள்ளி அரசின் சார்பிலே துவக்குவது, அதாவது truncated-ஆக உருவாக்குவது என்பதை அரசு பொதுவாக செய்வதில்லை என்ற ஒரு கொள்கையிலே இருக்கிறது. தவிர, அவர் குறிப்பிட்டுச் சொல்வதைப்போல அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய செம்பனார்கோவில், ஆக்கூர் போன்ற பகுதிகளில், மாத்தூர் போன்ற பகுதிகளில் இரண்டு கிலோ மீட்டரிலே இருப்பதாக எனக்குத் தகவல் தந்திருக்கிறார்கள். எனவே அங்கே இருக்கக்கூடிய அந்த அரசு நிதியுதவி பெறக்கூடிய தொடக்கப் பள்ளியை விதிமுறைகளுக்குட்பட்டு தரம் உயர்த்துவதற்கு அரசுக்குக் கோரிக்கைகளை, கருத்துருக்களை, முன்மொழிவுகளை அனுப்புவார்கள் என்று சொன்னால் மிக விரைவில், இந்த ஆண்டிலே அவற்றைத் தரம் உயர்த்துவதற்கு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு பரிசீலிக்கும்.

2010 ஏப்ரல் 19]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. பெரியசாமி.*

**திரு. மு.க. பெரியசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கல்விக்காக இந்த ஆண்டு கூடுதல் நிதியை ஒதுக்கியதற்கு நன்றி. அதைப்போல, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி, என்ற அந்தக் கொள்கையின் அடிப்படையிலே பள்ளிகளைத் தரம் உயர்த்துமாறும் கோருகிறேன். என்னுடைய தொகுதி கொண்டத்தூர், வைத்தியநாதபுரத்தில் ஒரு நடுநிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அதிலே 480 மாணவர்கள் பயிலுகின்றனர். மக்கள் பங்களிப்புத் தொகை ரூபாய் ஒரு இலட்சம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே செலுத்தப்பட்டுவிட்டது. அந்தத் தொகையைக்கூட அந்த கிராமத்தினுடைய கோயில் விசேஷங்களையெல்லாம் நிறுத்தி, படிப்பின் அவசியம் கருதி, அந்தத் தொகையைச் செலுத்தி, அவர்கள் உயர்நிலைப் பள்ளிக்காக காத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைப்போல, வடகரை; வடகரையிலும், 450 மாணவர்கள் பயின்று கொண்டிருக்கின்றனர். அவர்களும் மக்கள் பங்களிப்புத் தொகையான ரூபாய் ஒரு இலட்சம் செலுத்தி, இரண்டு ஆண்டுகள் ஆகிறது. அவர்களும் உயர்நிலைப் பள்ளிக்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, கல்விக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நிதி ஒதுக்கியிருக்கிற நம்முடைய முதல்வர் அவர்களும், அதைப்போல, கல்வித் துறையிலே பாராட்டைப் பெற்றுக் கொண்டிருக்கிற நமது அமைச்சர் அவர்களும், இந்தப் பள்ளிகளைத் தரம் உயர்த்தித் தர முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கல்வியாண்டில், ஏறத்தாழ 200 பள்ளிகளை அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்மூலமாகத் தரம் உயர்த்தும் அரசாணைகளை கடந்த மார்ச் மாதம் அரசு வெளியிட்டிருக்கிறது. இந்த ஆண்டு கூடுதலாக,*

மேலும் ஒரு 200 பள்ளிகளையாவது தரம் உயர்த்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு நாம் கோரிக்கை வைத்து இருக்கிறோம். அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ், வரக்கூடிய ஆண்டுகளிலே அதிகமான நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தக்கூடிய சாத்தியம் இருக்கிறது. அரசு அதற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்கிறது. ஏறத்தாழ 5 கிலோ மீட்டர் radius-க்குள்ளாக ஒரு உயர்நிலைப் பள்ளி வரவேண்டும் என்ற ஒரு கொள்கையை அரசு எடுத்திருக்கிறது. அப்படி உருவாக்கப்படுகிறபோது அவர் குறிப்பிட்டிருக்கக்கூடிய இந்த இரண்டு பள்ளிகளையும் அந்தப் பட்டியலிலே இணைத்துக்கொள்வதற்கு அரசு நிச்சயமாக முன்னுரிமை அளிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 59, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. செளந்திரபாண்டியன், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**59—**

**வணிக வளாகம்**

***35107—திரு. அ. செளந்திரபாண்டியன்:**

*மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கோயம்புத்தூரில் தாட்கோ மூலம் கட்டப்பட்ட வணிக வளாகத்தினைச் சீரமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில் எப்போது?*

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கின்றேன்.*

*(அ) மற்றும் (ஆ): மத்திய சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் தாட்கோமூலம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் கட்டப்பட்ட 90 கடைகளில் பல்லடம் மற்றும் அவினாசியில் கட்டப்பட்ட 20 கடைகள், திருப்பூர் மாவட்டத்தின் எல்லைக்குட்பட்டுள்ளன. மீதமுள்ள 70 கடைகளில் 20 கடைகள் சூலூர் பேரூராட்சிக்கு விற்கப்பட்டுள்ளன. 10 கடைகள் வாடகைக்கு விடப்பட்டு வாடகை*